JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **39/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 7** | Prosecution /Defence / Court | |
| Name | வீராசாமி | Village | காமராஜ் வீதி, வெள்ளாங்கோவில் |
| Father's Name | பெருமாள் | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 12.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பள்ளி வேன் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். திங்களூர் காசுகாரன்பாளைத்திற்கு அருகில் 11.01.2019 ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் மேற்கு திசையிலிருந்து கிழக்கு நோக்கி டிஸ்கவர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் ரோட்டின் ஓரமாக நடந்து சென்ற அம்மாசை மீது மோதியதில் அம்மாசைக்கு தலையிலும், காலிலும் பலத்த இரத்த காயம் ஏற்பட்டு விட்டது. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை உண்டாக்கிய நபரை இருட்டு நேரம் என்பதால் நான் சரிவர பார்க்கவில்லை. பெருந்துறை KMC மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைப் பெற்றுக் கொண்டு மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனையில் சேர்த்த போது அவர் சிகிச்சை பலனளிக்காமல் இரவு 1.00 மணிக்கு இறந்து போய் விட்டார்.

2. அதன் பின்னர் 12.01.2019 ம் தேதி காலையில் திங்களூர் காவல் நிலையத்திலிருந்து உதவி ஆய்வாளர் அவர்கள் வந்து விபத்து ஏற்பட்ட காசுகாரன்பாளையத்தில் உள்ள இடத்தை பார்த்து மாதிரி வரைபடம் வரைந்தார். நான்

சம்பவ இடத்தை அடையாளம் காட்டினேன். பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜர் சாட்சியாக என்னையும், வடிவேலையும் சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டதின் பேரில் பார்வை மகஜரில் வடிவேல் முதலாவதாகவும், நான் இரண்டாவதாகவும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். என்னை திங்களூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்தில் நடந்த இடத்தில் ரோட்டு வேலை நடந்து கொண்டு இருந்தது ஜல்லிக்கல் போட்டுக் கொண்டு வந்தார்கள் என்றால் சரியல்ல. தார் ரோடு எந்த திசையில் உள்ளது என்றால் கிழமேல் தார் ரோடு ஆகும். பாதயாத்திரை ஆக நாங்கள் எத்தனை பேர் சென்றோம் என்றால் 30 பேர். 30 பேரும் பயணத்தை எங்கிருந்து ஆரம்பித்தோம் என்றால் வெள்ளாங்கோவில் காமராஜர் நகரிலிருந்து ஆரம்பித்தோம். 30 பேர் நாங்கள் பாதயாத்திரை சென்றதால் எங்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்று போலீசார் இடம் வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. 30 பேர் பாதயாத்திரை சென்ற விவரத்தை போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. விபத்து நடந்தவுடன் விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் வந்தார்களா என்றால் இல்லை. போலீசாருக்கு யார் உடனே விபத்து பற்றி தகவல் சொன்னது என்றால் உடனே தகவல் சொல்லவில்லை அடிபட்டவர்களை காப்பாற்ற வேண்டும் என்று இருந்தோம். ஆம்புலன்ஸ் நான் உடன் சென்றேன் என்றால் ஆமாம். 30 பேரில் எத்தனை பேர் ஆம்புலன்ஸ் சென்றோம் என்றால் ஐந்து பேர் சென்றோம். வடிவேல் பூபதி, ரங்கசாமி, ரவி, நந்தினி ஆகியோர்கள் சென்றோம். ஈரோடு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவுடன் போலீசாருக்கு தகவல் சொன்னோம் என்றால் இல்லை. விபத்து சம்பந்தமாக மறுநாள் எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சுமார் காலை 10 மணி இருக்கும்.

3. புகார் கொடுப்பதற்கு யார் யார் காவல் நிலையத்துக்கு சென்றிருந்தோம் என்றால் நானும் பூபதி மற்றும் வடிவேல் ஆகியோர் சென்று இருந்தோம். காவல் நிலையத்தில் யார் புகார் எழுதிக் கொடுத்தது என்றால் நான் தான் எழுதி கொடுத்தேன். புகார் எழுதிக் கொடுக்கும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 12 மணிக்குள் இருக்கும். போலீசார் சம்பவ இடத்தை பார்த்துவிட்டு வந்து என்னிடம் புகார் வாங்கினார்கள் என்றால் சரியல்ல புகார் வாங்கிவிட்டு சென்றார்கள். பாதயாத்திரை சென்ற பாதி பேர் வீட்டுக்கு சென்று விட்டார்கள் பாதி பேர் மருத்துவமனைக்கு வந்தார்கள். நான் சொல்வது போல் பாதயாத்திரைக்கு யாரும் செல்லவில்லை என்றால் சரியல்ல. தார் ரோட்டில் நடந்து சென்றவர் திடீரென்று குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல.

4. நான் அடையாளம் காட்டிய இடத்தை தான் போலீசார் வரைபடத்தில் குறித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் கேட்டுத்தான் போலீசார் வரைபடம் வரைந்தார்கள் என்றால் ஆமாம். இருசக்கர வாகனம் எந்த இடத்தில் இருந்தது என்று வரைபடத்தில் போலீசார் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தை போலீசார் புகைப்படம் எடுத்தார்கள் என்றால் சரிதான். நான் புகார் கொடுக்க செல்லும்போது பூபதி, நந்தினி, சிவகாமி, சுகன்யா, ராமன், வடிவேல் என்னிடமும் பெயர் விலாசங்களை வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் எங்கள் 7 பேரிடமும் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு போலீசார் எங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் போலீசார் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை